## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.400/2018

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.03.2024 | தந்தை பெயர்: | வெங்கடாசலம் |
| பெயர்: | தெட்சிணாமூர்த்தி (DW-1 Chief ) | வயது : | 63/2024 |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 26.03.2024.**

நான் இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

தாவா சொத்திற்கு நான் செலுத்திய தீர்வை ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை-3) தாவா சொத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதற்கான மின் கட்டண அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** (வாதி தரப்பில் மேற்படி மின் இணைப்பு அமுலில் இல்லை என ஆட்சேபணை செய்யப்பட்டு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணையாது தீர்ப்பின்போது பரிசீலிக்கப்படும்) 24.02.1999-ம் தேதியிட்ட எனது தாயாரின் இறப்பு சான்றின் உண்மை நகலை தாக்கல்

செய்கிறேன் **அது பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 20.04.1999-ம் தேதியிட்ட எனது தாயார் ஆட்சியம்மாளின் வாரி சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.